(6 pages) **Reg. No. : ..................................**

**Code No. : 8769** **Sub. Code : PTLM 41**

M.A. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2019.

Fourth Semester

தமிழ் – Core

பண்டை இலக்கியம்

(For those who joined in July 2017 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. காஞ்சியானது எத்திணைக்குப் புறனாக அமைகிறது?

   (அ) மருதம் (ஆ) நெய்தல்

   (இ) கைக்கிளை (ஈ) பெருந்திணை

2. அகமா? புறமா? என்ற கேள்விக்கு உள்ளாகிய சங்க இலக்கியம்

   (அ) குறிஞ்சிப்பாட்டு (ஆ) சிறுபாணாற்றுப்படை

   (இ) பட்டினப்பாலை (ஈ) நெடுநல்வாடை

3. "சூருடை நனந்தலைச் சுனைநீர் மல்க

   பெருவரை அடுக்கத்து அருவி ஆர்ப்ப"– இவ்வரிகளை எழுதியவர்

   (அ) பெரும்பதுமனார் (ஆ) இளங்கீரனார்

   (இ) நல்வெள்ளியார் (ஈ) பெருங்கடுங்கோ

4. களவன் என்றால் என்ன?

   (அ) கள்வன்

   (ஆ) நண்டு

   (இ) அண் களவன்

   (ஈ) பிளவுபட்ட நண்டு

5. இலக்கணக்குறிப்பு வீழ்பிடி

   (அ) கட்டளை (ஆ) தொழிற்பெயர்

   (இ) வினைத்தொகை (ஈ) காலம் கரந்த பெயரெச்சம்

6. சோழன் கரிகாற் பெருவளத்தானைப் பாடிய புலவர்

   (அ) குடபுலவியனார்

   (ஆ) கருங்குழலாதனார்

   (இ) கழாத்தலையார்

   (ஈ) பூதப்பாண்டியன்



*Nesamony Memorial Christian College, Marthandam*

7. பெருங்சேரல் இரும்பொறை எந்த மன்னரை வென்று, அந்த மன்னர் நாட்டு ஆநிரைகளைக் கவர்ந்து வந்தான்?

(அ) பாண்டிய மன்னன்

(ஆ) சேர மன்னன்

(இ) நந்தி மன்னன்

(ஈ) கழுவுள்

8. "ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி

மாங்குடி மருதன் தலைவனாக"– என்ற வரிகள் இடம் பெறும் நூல்

(அ) மதுரைக்காஞ்சி (ஆ) புறநானூறு

(இ) குறிஞ்சிப்பாட்டு (ஈ) சிறுபாணாற்றுப்படை

9. நல்லிக்கோடனின் எந்த நாட்டைச் சார்ந்தவன்?

(அ) பாண்டிநாடு (ஆ) சோழநாடு

(இ) ஒய்மாநாடு (ஈ) வேழநாடு

10. கலுழி என்ற சொல்லின் பொருள்

(அ) சாரல் (ஆ) திரை

(இ) மத்தகம் (ஈ) நீர்ப்பெருக்கு



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் <u>250 சொற்களில்</u> மிகாமல் விடை தருக.

11. (அ) தொல்காப்பியரின் திணைக்கோட்பாட்டினை விளக்குக.

(அல்லது)

(ஆ) விளக்குக : அன்பின் ஐந்திணை, கைக்கிளை, பெருந்திணை.

12. (அ) பிரிவு உணர்த்தப்பட்ட தோழி தலைவனைச் செலவு அழுங்குவித்தத் திறத்தை நற்றிணையின் பாலைத்திணைப் பாடல்கள் வழியாக விளக்குக.

(அல்லது)

(ஆ) (i) "அள்ளல் ஆடிய புள்ளிக் களவன்"

(ii) "முள்ளி வேர் அளைக் களவன் ஆட்டி."–எனத் தொடங்கும் இரண்டு பாடல்களையும் எழுதி, இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல், கூற்று, பாடலின் பொருளை விளக்குக.

13. (அ) அதியமான் தகடூர்ப் பொருது வீழ்ந்த எழினியை அரிசில் கிழார் பாடிய கையறு நிலைப்பாட்டின் தன்மையினைப் புலப்படுத்துக.

(அல்லது)

(ஆ) தோழி வரைவு கடாயது பற்றி உலோச்சானர் பாடிய தோழியின் கூற்றாக அமையும் பாடலின் கருத்தினை விளக்குக.



Nesamony Memorial Christian College, Marthandam

14. (அ) "நலம்பெறு திருமணி" என்ற பதிற்றுப்பத்து பாடல் வழியாக நீவிர் அறியும் செய்திகளை எடுத்தியம்புக.

(அல்லது)

(ஆ) "எல்லாப் பொருளும் நீயே" என்னும் தலைப்பில் நல்லெழுதியார் திருமாலைப் பாடிய பாங்கினைக் குறிப்பிடுக.

15. (அ) எயிற்பட்டினத்தில் கிடைக்கும் பொருள்கள் குறித்துச் சிறுபாணாற்றுபடை கூறுவனவற்றை விளக்குக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிப்பாட்டில் இடம்பெறும் சுனை நீராடல் பகுதியின் செய்திகளைப் புலப்படுத்துக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கு <u>600 சொற்களுக்கு</u> மிகாமல் விடை தருக.

16. (அ) சங்க இலக்கிய அகத்திணைக்கான கோட்பாடுகளைத் தெளிவுறுத்துக.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டிலுள்ள அக இலக்கியங்களை அறிமுகம் செய்க.



17. (அ) குறுந்தொகை, முல்லைத் திணைசார் பாடல்களால் அறியப்படும் செய்திகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) களவன் பத்தில் இடம்பெறும் செய்திகளை விளக்கி எழுதுக.

18. (அ) புறநானூற்றுப் பாடல்வழியாக அறியப்படும் அரசர்கள் குறித்தெழுதுக.

(அல்லது)

(ஆ) "மறம் கொள் இரும்புலி" என்ற கலித்தொகை பாடல்வழி, வள்ளைப் பாட்டுப்பாடத் தோழி அழைக்க, அதற்குத் தலைவி எங்ஙனம் இசைவு தெரிவித்தாள்? விளக்குக.

19. (அ) திருமாலின் சிறப்புகளைக் கடுவன் இளவெயினனார் பரிபாடலில் எங்ஙனம் பதிவு செய்துள்ளார்? விளக்குக.

(அல்லது)

(ஆ) நால்வகைப் படைகளின் வலிமைகளாக மதுரைக்காஞ்சி கூறுவனவற்றை விளக்குக.

20. (அ) நல்லியக் கோடனின் சிறப்புகளைச் சிறுபாணாற்றுபடையின் வழிநின்று எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிப்பாட்டில் இடம்பெற்றுள்ள தொண்ணூற்று ஒன்பது மலர்களை அறிமுகம் செய்க.

---



*Nesamony Memorial Christian College, Marthandam*